வரையில் மருத்துவக் கல்லூரி போன்ற ஏனைய காரியங்களுக்காக நிதி பயன்படுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

காட்டுமன்னூர் கோயிலிலுள்ள ஆண்கள் ஆரம்பப் பள்ளிக் கட்டடம்

*** 382 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) சிதம்பரம் தாலுகா காட்டுமன்னூர்கோயில் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த காட்டுமன்னூர்கோயிலில் இருக்கும் ஆண்களுக்கான யூனியன் ஆரம்பப் பாடசாலை அமைந்துள்ள வாடகைக் கட்டடம் பழுதடைந்து இடிந்த நிலையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) கட்டடத்தின் சில பாகங்கள் செப்பனிடப்பட வேண்டிய நிலையிலுள்ளன.

(இ) செப்பனிட வேண்டிய வேலைகளை மேற்கொள்ள அக் கட்டட உரிமையாளர் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் இப்பள்ளி தற்போதைய இடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

சோழவந்தானிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*** 383 வினு.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (Marketing Society) கலைக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) இச் சங்கத்தை நடத்தியதில் பல ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டதால், இச்சங்கத்தின் நிர்வாகக் குழு கலைக்கப்பட வேண்டும் என்றும், தனி அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்றும் 1966-ஆம் ஆண்டு மே மாதத்தில் கட்டளையிடப்பட்டது. இச் சங்கத்தை மூடிவிடும்படி Liquidate செய்யும்படி 1969-ஆம் வருடம் அக்டோபர் மாதம் கட்டளையிடப்பட்டது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, இந்த விற்பனைச் சங்கம் கலைக்கப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. அந்தச் சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் மாவட்ட அதிகாரிகளைத் தங்கள் வசம் படுத்தி, தப்பித்துக் கொள்ள முயற்சிசெய்கிறார்கள். ஆகவே, உயர்மட்ட அதிகாரி ஒருவரைப் போட்டு இச்சங்க நிர்வாகஸ்தர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Writ petition against Government Order

* 384 Q. THIRU N. S. V. CHITHAN: Will the Hon. Minister for Religious Endowment be pleased to state:

(a) whether the attention of the State Government has been drawn to the judgment of the Madras High Court in revising its order on a house owner's writ about the 2nd July, 1969; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) தியாகராயநகரில் உள்ள ஒரு வீட்டை அரசின் பொறுப்பிலிருந்து விடுவிக்க மறுத்து அரசு ஆணை பிறப்பித்தது. அதை எதிர்த்து அந்த வீட்டுச் சொந்தக்காரர் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். ரிட் மனுவை அனுமதித்து உயர் நீதி மன்றம் 30-6-69 அன்று பிறப்பித்த ஆணையைப் பற்றி அரசு அறியும்.

(இ) சென்னை, உயர் நீதி மன்றத்தில் மேற்குறிப்பிட்ட ஆணைகளின் மீது மேல்முறையீடு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

குந்தா மின் திட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர்.

* 385 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குந்தா மின் திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப்படும் கழிவு நீர் எவ்வளவு கன அடி?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பவானி, குந்தா ஆறுகள் அவற்றின் கிளை ஆறுகளான அவலஞ்சி, எமரால்டு மற்றும் நீலகிரியிலுள்ள பல ஓடைகள் ஆகியவற்றின் நீரை குந்தா மின்சக்தி உற்பத்தி நிலையத்தொடரைச் சேர்ந்த ஐந்து மின்சக்தி உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்திக் கொண்டு இறுதியாகப் பில்லூர் அணையின் கீழுள்ள குந்தா மின் நிலையம் 4 லிருந்து அது வெளிவிடப்படுகிறது. குந்தா மின் நிலையம் 4 லிருந்து வெளிவிடப்படும் நீரின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு :—

1968–69-ம் ஆண்டுக் கால அளவில்—

மொத்தம்	..	31,678·28 மில்லியன் கன அடி.
சராசரி வினாடிக்கு	..	1,004 கன அடி.

1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரையிலுள்ள கால அளவில் :—

மொத்தம்	..	18,438·26 மில்லியன் கன அடி.
சராசரி வினாடிக்கு	..	1,166 கன அடி.